MCOP.No. 162/2022

Date : 12.02.2026

Witness Name & Rank – கிருஷ்ணசாமி – PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 3வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றேன் என்றால் சரிதான். நான் எந்த திசையில் இருந்து வந்தேன் என்றால் கோயமுத்தூரில் இருந்து பல்லடம் நோக்கிய சாலையில் லட்சுமி மில் அருகே நான்கு சாலை சந்திப்பில் விபத்து நடந்தது. அந்த விபத்து சாலையை கடந்தபோது நடந்தது என்றால் சரிதான். எனக்கு இருசக்கர வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். உரிய ஓட்டுநர் உரிமம் இன்றி சாலை விதிகள் பற்றி தெரியாமல் எனது கவனக்குறைவால் தான் வாகனம் ஓட்ட தெரியாமல் விபத்தை வரவழைத்து கொண்டேன் எனவே இந்த விபத்திற்கும் 1வது எதிர்மனுதாரருக்கும் யாதொரு காரணமும்இல்லை எனவே 3வது எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான்கு ரோட்டில் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை. எனது கவனக்குறைவால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. விபத்தை தவிர்க்கும் கடைசி வாய்ப்பு எனக்கு இருந்தும் நான் விபத்தை வரவழைத்து கொண்டேன் என்றால் சரியல்ல.

2. போலிஸார் விசாரித்து இறுதி அறிக்கையை எனக்கு எதிராக தாக்கல் செய்ததால் தான் நான் அதை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தாக்கல் செய்தால் எனது கவனக்குறைவால் விபத்து நிகழ்ந்தது தெரிந்துவிடும் என்பதால் அது தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ 5 ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. மருத்துவமனை மூலம் தாக்கல் செய்யாமல் என் மூலம் ம.சா.ஆ 5 தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. முதல் தகவல்அறிக்கை படி விபத்து 25ம் தேதி நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ 6ன் கீழ் நான் 27ம் தேதி தான் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல, நான் விபத்து நடந்தவுடன் பல்லடம் அரசு மருத்துவமனையில் காண்பித்து அன்றைய தினமே பொன்னி மருத்துவமனையில் சேர்ந்துவிட்டேன். நான் சொல்வது தவறு என்றும் பல்லடம் அரசு மருத்துவமனையில் 25ம் தேதி அனுமதிக்கப்பட்ட விபத்து பதிவேடு இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை எனவே நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ 6 மருத்துவ குறிப்பிற்கும் வழக்கில் சொல்லப்பட்டுள்ள விபத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

3. விபத்து சமயத்தில் தலை கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும் தலை கவசம் அணிந்து செல்லவில்லை எனவே தான் தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் தொடர் சிகிச்சையில் உள்ளதை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்களுக்கும் வழக்கிற்கும் யாதொரு சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது வருமானத்தை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லைஎன்றால் சரிதான். நான் எந்த வேலையும் செய்யவில்லை வழக்கிற்காக மாதம் ரூ. 25 ஆயிரம் சம்பாதிப்பதாக

சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்ட ஈடு மிக அதிகமானது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/−)K.Yuvaraj,B.A.,B.L.,

சார்பு நீதிபதி, பல்லடம்.

---